334

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-ஞு மே-ஜூன்மீ [நெ. 5 & 6.

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee, Post Free.

எச்சரிக்கை.

பாபநாசம் தாலூகாவைச் சேர்ந்த கணபதி அக்கிரகாரத்திலும் சுற்றுவட்டம் கிராமங்களிலும் நெற்பயிர்களுக்கு கெடுதியை உண்டாக்குகிற ஒரு கொடிய வியாதி ஒன்று தோன்றி ஏராளமாக பரவி யிருப்பதாய் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களால் ரிபோர்டு செய்யப்பட்டிருக்கிறது. மேற்கண்ட இடங்களில் மன்னார்குடி பக்கத்திலிருந்து குரங்குசம்பா என்கிற தினிசு விதையை வரவழைத்து போட்டதாயும் அது நன்றாய் விளைந்ததாயும் தெரிகிறது. ஆனால் இந்த குரங்குசம்பாவில்தான் மேற் சொன்ன வியாதி அதிகமாகப் பரவி கெடுதி செய்ததாகவும் தெரிகிறது. இந்த வியாதியின் நிமித்தம் நாளது வருஷத்தில் விளைச்சல் ஏகர் 1-க்கு 2½ கலம் முதல் 10 கலம் வரையில்தான் கண்டது. அதோடு குரங்குசம்பாவை மட்டும் அடிக்காமல் மற்ற தினிசுகளுக்கும் ஷை வியாதி பரவிற்று. டெல்டாவில் வண்டல் மிகுந்த பூமிகளில் மேலேகண்ட குரங்குசம்பாவை நூதனமாக பயிரிடாமல் இருக்க வேணுமென இதனால் மிராசுதார்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

Tanjore Collector's Office,
Dated 22nd April 1918.

மதிப்புரை.

மைலாபூரில் உபகாரச்சம்பளம் பெற்ற விவசாய இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ ஜி. ராஜகோபால் அவர்களால் பிரசுரிக்கப்படும். தென்னிந்திய விவசாயக் கைத்தொழில் சுகாதாரம் என்னுமாதாந்திரப்பத்திரிகையின் சித்திரைமீ த்திய பிரதி ஒன்றை வரப்பெற்றோம். அதில் விவசாயம், கைத்தொழில், சுகாதாரமுறைகளைப் பற்றி அரிய பெரிய விவசாயங்களடங்கி இருக்கின்றன. அப் பத்திரிகையிலிருந்து ஒரு விலாசமும் பிரசுரம் செய்திருக்கிறோம். ஷை பத்திரிகையின் வருஷ சந்தா ரூ 3 தான்.

விவசாய சங்கம் 12-வதாண்டு நிறைவிழா.

17—5—18உ மாலை 5-மணிக்கு இந்நகரம் கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் மேற்படி சங்கத்தின் 12-வது வருஷ பூர்த்தி கொண்டாட்டம் நடைபெற்றது. அச்சமயம் பல மிராசுதார்களும், கனவான்களும் சுமார் 100 பேருக்கு அதிகமாகவே வந்திருந்தார்கள். முதலில் வந்தவர்களுக்கு சிற்றுண்டிகளும், தேத்தண்ணீரும் கொடுக்கப்பட்டன. 6-30 மணிக்கு மீட்டிங்கு கூடப்பட்டது. தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஜே. ஆர். ஹக்கின்ஸ், ஐ.சி.எஸ். தலைமை வகித்தார். வருஷாந்திர ரிபோர்ட்டை காரியதரிசி மிஸ்டர் கே. சீனிவாச ஐயங்கார் படித்தார். அதனில் காணும் முக்கிய அம்சம் பின்வருமாறு: சங்கத்தில் சென்ற 1916 ஜூலைமாதம் ஆரம்பத்தில் 461 பேர்களிருந்தார்கள். அதில் 17 மெம்பர் புதிதாய்ச்சேர்ந்தவர்கள். சங்கமானது ஒரு நிர்வாக கமிட்டியில் நிரந்தரமாக நிர்வாகம் செய்யப்பட்டுவருகிறது. சென்ற வருஷத்தில் நான்கு மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. சங்கத்தில் ஐவேஜி நிலைமை சென்ற வருஷக்கையிருப்பை சேர்த்து ரூபா 731—12—10 செலவு ரூபா 446—3—9, 1917-ம் வருஷம் ஜூன் 30-ந் தேதியில் பாக்கி ரூபா 285—9—1; விதைகள் விற்பனையிலிருந்து ரூபா 151—1—6 வரவு வந்திருக்கிறது. சங்கத்தில் ஒரு மாதந்திரப் பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறது. விதைகள் சங்கத்தின் மெம்பர்களுக்கு மிக்க மலிவாகக் கொடுத்தும் ரஸாயன எருவும் கொடுத்து முக்கியமான வேலையைச் செய்து வந்திருக்கிறது. இச்சங்கத்திற்கு விவசாய இலாகாவில் அளிக்கப்படும் பிரசுரங்களை இனாமாக அதன் மெம்பர்களுக்கு கொடுத்துவருகிறது. இச்சங்கத்தினிடம் ஏற்கெனவே இருந்த பிரஸிடெண்டு மிஸ்டர் ஜே. ஆர். கிருஷ்ணைப்பா ஐ. சி. எஸ். விசேஷ சிரத்தை காட்டியதற்கு வந்தனம் செய்கிறோம். தற்சமயம் சங்கத்தின் பிரஸிடெண்டாக மிஸ்டர் ஏ. எல். பின்டோ (டெப்டி கலெக்டர்) இருந்து வருகிறார். மேன்மேலும் சங்கத்தின் அபிவிருத்தியில் மெம்பர்கள் மிக்க அக்கரை எடுத்துக்கொண்டு ஐக்கியமாய் ஒத்துழைக்க வேண்டுகிறோம் என்று படித்து முடித்தார். பிறகு சங்கத்தின் பிரசிடெண்டாக மிஸ்டர், ஏ. எல். பின்டோவையும்; காரியதரிசிகளாக மெஸர்ஸ் கே. சீனிவாஸ ஐயங்காரும் நியமனம் பெற்றார்கள். ஆனரபில் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியாரை உப அக்கிராசனாதிபதியாகவும் தேர்ந்தெடுத்தார்கள். இவைகள் சபையோர்களால் ஒற்றுமையாக அங்கீகரிக்கப்பட்டது. இது முடிந்ததும், மாயவரம் விவசாய இலாகா டிமான்ஸ்டிரேடர் மிஸ்டர் வி. எஸ். நாராயணசாமி அய்யர் " தஞ்சை ஜில்லாவில் நெற்பயிர் சாகுபடி " என்ற அரிய வியாசம் ஒன்றை எழு-

திப் படித்தார். நூதன முறை சம்பந்தமாயும் மிராசுதார்கள் கிராமங்களிலேயே வசிப்பதை விட்டு பட்டணவாசங்களில் வசிப்பதால், சாகுபடியும், நிலத்தின் விளைவும் கம்மிப்பட்டு, நாளாவட்டத்தில் க்ஷீணமடைவதையும் எடுத்துக்கூறி இனிச்செய்யவேண்டிய முறைகளையும் நன்றாய் அதில் சொல்லியிருந்தார். அக்கிராசனாதிபதி எழுந்து கனவான்களே! என்னை இச்சங்கத்தின் வருஷாந்திர கொண்டாட்டத்திற்குத் தலைமைவகிக்க கேட்டுகொண்டதற்காக சந்தோஷத்துடன் வந்தனம் செய்கிறேன். இச்சங்கத்தைப்போல் பல சங்கங்கள் எல்லா விடங்களிலும் தோன்றிமறைந்து விட்டன. இச்சங்கமானது இடைவிடாமல் நின்று நிலவுபோல் மிராசுதார்களுக்கு உதவியாக தன் வேலையைச்செய்து இப்பொழுது பன்னிரண்டாவது ஆண்டும் நிறைவுற்றது. தஞ்சைஜில்லாவானது விவசாயத்தில் முதன்மையானதென்பதை யாவரும் அறிவார்கள். நம்முன்னோர்கள் விவசாய முறைகளை அனுஷ்டிப்பதில் மிக்க தேர்ச்சியும் அனுபவ அறிவும் பெற்றவர்களாய் இருந்தனர். அவர்கள் சாகுபடி செய்தகாலம் ஆரம்பகாலமானதென்றே சொல்லவேண்டும். அக்காலங்களில் முதல் இரண்டு வருஷங்கள்தான் நல்ல மாசூலை மலைநாட்டு விவசாயிகள் அடைந்து வந்தார்கள். அச்சமயங்களில் சிறுகச் சிறுக காடுகள் அழிக்கப்பட்டன. ஆனால், தஞ்சாவூர் ஜில்லாவிலோ கெடுதலுக்கு ஆஸ்பதமான காடுகளை வெகு நாளைக்கு முன்பே அழித்துவிட்டார்கள். பசுந்தாள் எருவை குறைவில்லாமல் கொடுத்து வரும்படியான காடுகளை இல்லை. சாகுபடி முன்னேற்றமடைய கால்நடைகளால் கிடைக்கும் சாணி, தழை எருவையுமே நாம் நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. இச்சங்கம் எருவின் அவசியங்களைப்பற்றி பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டும். கவர்ன்மெண்டாரும் உதவி செய்கிறார்கள். பசுந்தாள் உரத்தைப் பயிரிடுவதில் தண்ணீர் தீர்வை கிடையாது. எப்படி விவசாயத்தை சங்கத்தின் மெம்பர்கள் முன்னேற்றமடையச் செய்வது? எல்லா மெம்பர்களும் ஐக்கியமாகச் சேர்ந்து ரஸாயன முறைகளையனுசரித்த வழியில் சாகுபடி செய்தும், அம்முறைகளைத் துண்டுப் பத்திரிகைகளின் மூலமமாய் பிரசித்தம் செய்யவும் வேண்டும். இந்த ஜில்லாவில் விவசாயப்பண்ணை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதால் வெகு தூரம் போகவேண்டியதில்லை எல்லாரும் போய்ப் பார்த்து வரலாம். ஆனால் ஒவ்வொரு மெம்பரும் தனித்தனியே ஒரு துண்டு நிலத்தில் ரஸாயன முறையில் சாகுபடி செய்து பயிரிடுபவர்களுக்குப் போதனை செய்து, துண்டுப்பத்திரிகைகளும் பிரசுரம் செய்து வந்தால் நல்ல ஸ்திதியில் விவசாயம் மேன்மைப்பட்டுவிடும். அனுஷ்டானத்தில் செய்தால் மட்டுமே பலன் உண்டாகும் என்று பேசி முடித்தார். தாலுகா போர்டு பிரசிடெண்டும் இந்த சங்கக்

தின் பழைய கார்யதரிசியுமான மிஸ்டர் வி. ஆர். லெக்ஷ்மிவராக ஐயங்கார் அக்கிராசனுதிபதிக்கு மாலை போட்டார். மிஸ்டர் வி. செளந்தரராஜ ஐயங்கார், ஜில்லா கலெக்டர் இச்சங்கத்தின் தலைமையை வகிப்பதற்கென்றே வந்தது மிக்க விசேஷமென்றும், அதற்காக நம்முடைய வந்தனங்களைச் செலுத்துவோமாகவென்றும் பேசினர். பிறகு புஷ்பங்கள் வழங்கி இரவு 7—20-மணிக்கு 12-வது வருஷ பூர்த்தி கொண்டாட்ட வைபவம் முடிவுற்றது.

(1916—17-வருஷாந்திர ரிபோர்டு.)

விவசாய சங்கம் :—1916—17ம் வருஷத்திய இச்சங்கத்தின் வருடாந்தர ரிபோர்ட்டுப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி இச்சங்கத்தில் வருஷ ஆரம்பத்தில் 461 மெம்பர்கள் இருந்தார்கள். அவர்களில் 454 பேர்கள் சந்தா செலுத்துகிறவர்கள். பாக்கி 7 பேர்கள் கெளரவ மெம்பர்கள். இறந்துபோனவர்களையும் ராஜிநாமா செய்தவர்களையும் விலக்கப்பட்டுவிட்டன. இவ்வருஷத்தில் 17-பேர்கள் புதிதாய் சேர்ந்தார்கள்.

சங்கத்தின் நிர்வாகம் :—முந்திய பொதுமீட்டிங்கில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக சபையாரால் இச்சங்கத்தின் நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வந்தன. டிவிஷனல் ஆபீசர் மிஸ்டர் ஜே. ஆர் கிருஷ்ணய்யா அக்கிராசனுதிபதியாக இருந்துவந்தார். அவர் ரஜாவின்மேல் இவ்விடம் விட்டுப் போனபிறகு, அவருடைய ஸ்தானத்திற்குவந்த மிஸ்டர் பிண்டோ அக்கிராசனுதிபதி ஸ்தானத்தை ஒப்புக்கொண்டார். கனம் ராவ்பகதூர் வி. கே ராமானுஜாச்சாரியார் உபஅக்கிராசனுதிபதியாகவும் மிஸ்டர் வி. ஆர் லெக்ஷ்மிவராக அய்யங்கார் காரியதரிசியும் கஜான்ஜியாகவும், மிஸ்டர் ஆர். சீனிவாஸ அய்யங்கார் உதவி காரியதரிசியாகவு மிருந்துவந்தார்கள். ஆனால் மிஸ்டர் வி. ஆர். லெக்ஷ்மிவராகய்யங்காருக்காக மிஸ்டர் கே. ஸ்ரீனிவாஸய்யங்கார் காரியதரிசி வேலையைப் பார்த்துவந்தார்.

வரவு செலவு:—முந்திய வருஷத்தில் மிகுதியிருந்த ரூபா 258—7—9 உள்பட நாளது வருஷத்தில் மொத்த வசூல் ரூபா 731—12—0. அதில் செலவு ரூபா 446—3—3. 1917ம் வருஷம் ஜூன்மாதத்தில் கையிருப்பு ரூபா 285—9—1. பசுந்தாள் எரு விதைகள் விற்றுமுதலினாலும், விரைநெல் விற்றுமுதலினாலும் வரவு ரூபா 151—1—6.

மீட்டிங்குகள் :—ரிபோர்ட்டில் கண்ட வருஷத்தில் மூன்று நிர்வாகசபை மீட்டிங்குகளும் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

சங்கத்தின் பத்திரிகை:—விவசாய அனுபோகத்தில் தேர்ச்சிபெற்ற மெஸ்ஸர்ஸ் எ. சுப்பிரமணிய அய்யர் பி. எ., ஆர். ஸ்ரீநி

வாஸய்யங்கார் பி. ஏ. இவர்கள் இப்பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்துவந்தார்கள் சங்கத்தின் கடைசி வருஷாந்தர மீட்டிங்கில் ராவ் சாகிப் ஏ. சேதுராமய்யர் ஆங்கிலத்திலும் தமிழிலும் "உரங்களைப்பற்றியும் தஞ்சை கூட்டுறவுச்சங்கத்தின் வேலைகளைப்பற்றியும்" சிறந்ததோர் உபந்நியாசம் செய்தார்.

விதைகள் டங்கிட்டுக் கொடுத்தல்:—வழக்கம் போல் இவ் விஷயத்தில் அதிக முயற்சிகள் செய்யப்பட்டன. ரசாயன எரு ஜாஸ்தியாக வரவழைக்கப்பட்டு குறைந்த விலைக்கு கொடுக்கப் பட்டது. சில மெம்பர்களிடமிருந்து எருவுக்காகவும், விதைகளுக்காகவும் வந்த விண்ணப்பங்கள் விவசாய டிபார்ட்டுமெண்டாருக்கு அனுப்பப்பட்டது.

பொது விஷயங்கள்:—இவ்வருஷத்தில் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும் சங்கத்திற்கு மிகுந்த உதவி செய்திருக்கிறார்கள்.

வெக்கை.

இது சென்னை விவசாய கலாசாலையில் பின்று தேறி விவசாய சாஸ்திரத்தில் வித்வான் என்று ஸர்டிபிகேட் பெற்ற பாதூர் வி. இராஜகோபாலச்சாரியார் எழுதியது.

வெக்கை யென்பது கால் நடைகளையே முக்கியமாகத்தாக்கி விவசாயிகளுக்குப் பெரும் சேதத்தை உண்டாக்கும் பெருவாரிக் கொள்ளை நோய்களில் முக்கியமானதாகக் கொள்ளலாம். இது கொஞ்சகாலமாய் நமது இராஜதானியில் தீவரமாம் உலாவி வந்து அநேக ஜில்லாக்களில் எண்ணிறந்த மாணங்களுக்குக் காரணமாய் இருக்கின்றது.

இந்த வியாதி ஆடு மாடுகளையே முக்கியமாகத் தாக்கினாலும் ஒட்டகங்களுக்கு இன்னும் மற்றுமுள்ள அசைபோடும் காட்டு மிருகங்களுக்கும் காணுவது ஸகஜம். அநேக விடங்களில் பன்றிகளுக்குக்கூட இந்த வியாதி காணுவதாக வதந்தியுமுண்டு. குதிரையையும் மனிதனையும் இது எப்பொழுதும் தொடர்ந்ததே யில்லை.

காற்றின் மூலமாயும் ஒருமாடு மற்றொன்றின் மேல்படுவதாலும் இது அதிசீக்கிரம் பரவக்கூடிய விபரீதமான தொற்று வியாதி வகுப்பில் சேர்ந்தது. கொடுமையாய் பரவும் இடங்களில் இந்த நோய்கண்ட 100 மாடுகளுக்குள் 90-க்கு மேலேயே மாணம் ஸம்பவிப்பது ஸகஜம். ஆனாலும், சாதாரணமாய் இது உலாவி வரும் இடங்களில் கூட நூற்றுக்கு ஐம்பதை விடக் குறைந்த சேதம் எற்படுவதாகத் தெரியவில்லை. இதைப்பற்றியே ஆடு மாடுகளுக்கு வரும் வியாதிகளில் வெக்கையே மிகவும்

கொடூரமானதென்று சொல்லவேண்டும்.

வெக்கை பரவுவது வெகு சுலபம். வியாதிகண்ட மாட்டின் ஜலமலத்தாலும் எச்சலின்மூலமாயும் வியாதிகண்ட மாடு வியாதி காணாத மாட்டின்மேல் பட்டாலும் வேலைக்காரன் மூலமாயும், நாய் கோழி முதலிய ஜந்துக்கள் வியாதிகண்ட இடங்களுக்குப் போய்வருவதாலும் வெக்கைப் பரவ காரணமுண்டு. வெக்கையால் இறந்த மாட்டின் தோலை உபயோகப்படுத்துவதாலும் இந்நோய் பரவுவதற்கு ஹேதுக்களுமுண்டு.

வியாதியின் குறிப்புகள்:— அநேக நோய்களைப்போல் இதுவும் வியாதிகண்ட ஜந்துவின் சீதோஷ்ண ஸ்திதியை உயர்த்தும், தர்மா மீட்டர் என்னும் உஷ்ணமாக்குங் கருவியைக்கொண்டு பார்ப்பின் 104 முதல் 105 டிக்ரிவரையில் சீதோஷ்ண ஸ்திதி உயர்ந்திருப்பதைக் காணலாம். இதைத்தவிர்த்து, வியாதிகண்ட மிருகம் மிகவும் சோப்பலாகவும் ஒரு வேலையும் செய்வதற்கு உடன்படாமலுமிருக்கும். வாயின் உள் புறத்திலிருக்கும் தோலின் வர்ணமும் கண்ணிலிருக்கும் உள் தோலின் வர்ணமும் மங்கலடையும். பசி குறையும்; அசைபோடுவது நின்றுவிடும் பசுவாகவாவது அல்லது பால்தரும் எருமையாகவாவதிருந்தால் பால் சுரப்பது நின்றுவிடும். இரண்டு மூன்று தினங்களில் நாக்கின் அடிப்பாகத்திலும் உதடுகளின் உள்புறத்திலும் கொப்பளங்கள் காணப்படும். மலச்சிக்கல் ஏற்படுவதோடு சாணியுடன் சீதமும் கலந்து வெளிவரும் வியாதிகண்ட மிருகம் எப்பொழுதும் விடாமல் தன்னுடைய தலையை தன் உடல் பக்கமாய் வைத்துக்கொண்டிருப்பதைக் காணலாம். கண்களிலிருந்து கனமான தண்ணீரும் வாயிலிருந்து நுரையும் வடிந்தவண்ணமிருக்கும் கண்களிலிருந்து பெறுகும் தண்ணீரானது அது படும் இடங்களிலெல்லாம் தோலைப் பிய்த்துக் காயம் உண்டாக்கும் சக்தியை உள்ளது. கழிச்சலும் துர்நாற்றத்துடன் ஆரம்பிக்கும். சாணி இரத்தத்தோடு கலந்துவருவதுண்டு. கழிச்சல் கண்டதும் வாயிலிருக்கும் கொப்பளங்கள் வெடித்து சிரங்காய்விடும். ஒருவேளை வீக்கமும் தோலின்மேல் காணலாம். கழிச்சல் கண்டதும சீதோஷ்ண ஸ்திதி குறையும். உடனே அதிக பலஹீனமும் இளைப்பும் உண்டாகும். இந்த வியாதி கண்டு 2 தினங்கள் முதல் 10 தினங்கள் வரையில் இந்நோயின் குறிகளையும் காணலாம். ஆனாலும் சாதாரணமாய் வியாதிகண்ட 7 தினங்களுக்குள்ளாக கட்டாயம் மரணமுண்டாவது நிச்சயம். அபூர்வமாய் கழிச்சல் காணுவதற்கு முன்னும் வியாதிகண்ட மிருகம் சாவதாகவும் வதந்தி.

ஸிகிச்சை:—தற்போது ஸிகிச்சையை இரண்டு விதமாகவே யெண்ணவும் வேண்டும். இதில் நோய்வாராமல் தடுக்கும் முறையே முக்கியமானது. நோய்கண்டபின் மருந்து பிரயோகம் செய்

வதானது இரண்டாவதாகத்தான் சொல்லவேண்டும். அதிகச் செலவுசெய்து ஹிமாலயத்திலுள்ள முஷிதாரிலுள்ள ஆஸ்பத்திரியில் தயாரித்த ஆண்ட்டி ரிண்டர் பெஸ்டுஸீரம் என்ற மருந்தை இவ்வியாதி வருவதற்குமுன் ஆடுமாடுகளின் இரத்தத்தில் கலக்கும் வண்ணம் ஒரு சிறிய காயஞ்செய்து அதில் தோலுக்குள் செல்லும் ஹைபோடர்மிக் ஸிரிஞ்ஜு என்ற பீச்சாங்குழலிலெடுத்துப் பிரயோகித்தால் இவ்வியாதி இப்படிப் பிரயோகித்த கால்நடைகளுக்கு வருவதில்லை. ஆனால் இம்முறையை மிருகஸிகிச்சையில் அனுபவமில்லாதவர் கையாடுவது நல்லதல்ல. ஆகையால் கால் நடைகளைக் காப்பாற்றும் அனைவரும் தங்கள் கிராமங்களைச்சுற்றி வெக்கை ஸஞ்சரித்தால் உடனே சமீபத்திலுள்ள மிருக ஸிகிச்சை ஆஸ்பத்திரிக்குப் போயாவது அல்லது மிருக ஸிகிச்சை இன்ஸ்பெக்டரை வரவழைத்தாவது தங்கள் கால் நடைகள் முழுவதற்கும் மேலே சொன்னவண்ணம் அம்மை குத்துவித்தல் மிகவும் நல்லது. இம்முறையை வியாதி கண்ட பின் அனுஷ்டித்தால் நன்மை யுண்டாவது துர்லபம் இம்முறையைக் கையாடுவது வெள்ளம் வருவதற்கு முன் அணை கோலுவதை யொக்கும்.

வியாதி கண்டபின் செய்யவேண்டிய ஸிகிச்சையும் முக்கியமானதுதான், வியாதி கண்டதும் வியாதி அடைந்த மாட்டைத் தனியே அடைத்துவிடவேண்டும். காவல்காரனைக் கவனமாய்ப் பார்க்கச் சொல்லி, ஆடுமாடு கோழி நாய், முதலான ஜந்துக்களை உள்ளே விடக்கூடாதென்று உத்தரவும் செய்யவேண்டும், மலச்சிக்கல் கண்டதும் பட்டணம் பாகாடி முத்துக்கொட்டை யெண்ணெயில் காலே அரைக்கால் ரூபாய் எடை கார்பாலிக் திராவகத்தை விட்டுக் கலக்கி நோய் கண்ட மாட்டுக்குக் கொடுக்கவேண்டும், வாயிலிருந்தும் கண்ணிலிருந்தும் வருவதை சுத்தம் செய்யவேண்டும் போரிக் தூள் கலந்த தண்ணீரால் சுத்தம் செய்வதுமெடுத்தது வாயை படிக்காரம் கலந்த தண்ணீரை விட்டுக் கொப்பளிக்கச் செய்யவும் வேண்டும். பிறகு காலை மாலையில் பட்டணம் அரைப்படிக் கஞ்சியில் அரைக்கால் ரூபாய் எடை கார்பாலிக் திராவகத்தைக் கலந்து நோயாளிக்குக் கொடுத்துவருதல் உத்தமம்.

பொட்டாஷியம் பர்மாங்கனேட் அரை ரூபாய் எடையெடுத்து 5 பலம் எடையுள்ள காடியில் கலந்து பிரயோகிப்பதும் சிறந்த முறையென்பது அநேக வைத்தியர்களின் அனுபவம் ஆனால் இந்த மருந்தை கார்பாலிக் திராவகம் கொடுக்காதபொழுதே உபயோகப்படுத்தவேண்டும். நன்றாய்ப் பார்ப்பதும் நல்லகாற்று உலாவிவரச் செய்வதும், பத்தியமாயும், சீக்கிரம் ஜீரணிக்கக் கூடியதுமான புல், முதலானவைகளைக் கொடுப்பதுமே வியாதி அனுகூலமடையச் செய்யும் ஸிகிச்சையில் முக்கியமானது.

இந்திய மிருக ஸிகிச்சை டிபார்ட்மெண்டைச் சார்ந்த மேஜர்

வாக்கர் அடியில்கண்ட சிகிச்சையையும் சிபார்சு செய்கிறார்:—
"கழிச்சல் ஏற்படுவதற்கு முந்தி சாதாரணமாய் பேதிக்குக் கொடுக்கும் மருந்து ஒன்று நோயாளிக்குக் கொடுக்கவேண்டும். அதாவது கால்படி முத்துக்கொட்டை எண்ணெயிலாவது 20 துளி நேர்வாள எண்ணெயை விட்டுக் கலக்கி கொடுக்க வேண்டும். பிறகு, போதையை உண்டாக்கும் நாட்டுச் சாராயம் 4 அவுன்ஸில் ஒரு ரூபா எடை மிளகு பொடியையும், முக்கால் பலம் சுக்குப் பொடியையும் போட்டுக் கலக்கிக் கொடுக்கவேண்டும். இதனால் பலஹீனமும் சன ஸ்திதியும் கொஞ்சம் நிவர்த்தியாகும். இதையே அரைப்படி கஞ்சியில் நான்கு மணிக்கு ஒருதரம் கொடுத்து வரவேண்டும் சுலபமாய் ஜீரணிக்கக்கூடிய இளம் புல் முதலானவைகளையே நோயாளிகளுக்கு கொடுப்பது நலம். கொஞ்சம் உப்பும் கஞ்சியில் கலந்து கொடுக்கவேண்டும். நோயாளியின் உடம்பை சாக்கால் போர்த்து உஷ்ணமாக வைத்திருப்பது சில சமயங்களில் அத்யாவச்யமாக விருக்கும். நிழலும் காற்றோட்டமும் முக்கியமாய் இருக்கும்படி செய்யவும் வேண்டும்.

ஆனாலும் கழிச்சல் கண்ட பிறகு நோயை சொஸ்தப்பண்ணுவது மிகவும் கஷ்டமென்பதே நமது அனுபவம்.

இந்த நோயால் தற்போது கால்நடைகளுக்கு உண்டாகும் சேதம் அபரிமிதமாக இருக்கிறது. இதைத் தடுக்காமல்விட்டால் போக்குவரவு சாதனங்களும், உழவு முதலிய விவசாய சம்பந்தமான வேலைகளுக்கும், பால், தயிர், நெய் முதலான உணவுப் பொருள்கள் அகப்படுவதற்கும் குந்தகம் ஏற்பட்டுவிடும்போலிருக்கிறது. ஆகையால் எல்லா விவசாயிகளும், மாடு வளர்ப்போரும் பால்காரர்களும் இந்தக்கொடிய வெக்கை சமீபத்தில் உலாவுவதை கண்டால் உடனே தங்கள் தாலூகா தாசில்தாருக்கு எழுதினால் உடனே அவர் மிருக சிகிச்சை இன்ஸ்பெக்டரைத் தருவித்து இவ்வியாதி பரவுமென்று சந்தேகிக்கும் கால்நடைகளுக்கெல்லாம் இந்த நோய் வாராமல் தடுப்பதற்காக மேலேகுறிப்பிட்ட மருந்தால் யாதொரு செலவு மன்னியில் அம்மை குத்தும்படி ஏற்பாடு செய்வார்.

இம்மாதிரி தடுக்கும் முறைகளைக் கையாளாவிட்டால் தங்கள் மாடுகளுக்கும் சேதம், இன்னும் அவ்வூரிலுள்ள மாடுகளுக்கும் பரவி அபரிமிதமான சேதத்தை உண்டுபண்ணும். ஆகையால் கால்நடைகளை வைத்தாளும் அனைவரும் மேலே கூறின நவீன நாகரீக முறைகளைக் கையாண்டு தங்கள் கால்நடைகளைக் காப்பாற்றுவதோடு பக்கத்திலிருப்பவர்களுக்கும் சேதத்தை உண்டாக்குவதற்கு காரணமாயுமில்லாமலிருக்கலாம். தவிரவும் இப்படிச் செய்வது நியாயமும் ஜீவகாருண்யமும் கலந்த செய்கையல்லவா?

(சுதேசமித்திரன்)

எரு.

எங்கெங்கே விவசாயம் நடத்தப்படுகின்றதோ அங்கங்கே மாட்டெருவைக் கெடாதபடி சேகரிக்கும் முறை தெரிந்து அப்பியசித்தால் எரு கண்ட இடத்தில் சிதறி அழுகி மட்கி தேக ஆரோக்கியததுக்கு கெடுதி சம்பவிக்காமலும் பலவித வியாதிகள் உண்டாகாமலும் இருக்கும். அப்போது மாசூல் தகுந்தவண்ணம் விருத்தியாகும். தொன்றுதொட்டு எருவிடும் வழக்கம்நடந்தேறி வருகிறது. மண் இளைத்தால் எருவிடுவது நம்மூரில் வழக்கம்.

நமது தேசத்தில் வ்ராஹமீர மஹரிஷி எருவிடும் விஷயமாய் 'ப்ராஹத் சமிஸ' என்னும் கிரந்தத்தில் ஒருவாறு விவரித்திருக்கிறார். ரோமதேசத்தில் வாரோ என்பவர் 2000 வருஷத்துக்கு முன் எழுதிய புஸ்தகத்தில் எருவைச் சேர்க்கும் பாகத்தில் இரண்டு அம்சங்களை வற்புறுத்தியிருக்கிறார். முதலாவது ஒவ்வொரு குடியானவனும் இரண்டு குவியல் எரு வைக்கவேண்டுமாம். ஒன்று மட்கிய எரு; மற்றொன்று சேர்ந்துவரும் புது எரு. ஏனெனில் செடிகளுக்கு எரு ஏற்றுவதில் மட்கிய எருவே அவசியமாம். இரண்டாவது எருவை எப்போதும் நனைத்தும் பக்கங்களில் இலை கொம்பு இவைகளால் மூடியும் வைக்கவேண்டுமாம். இந்த விஷயங்கள் தற்காலமும் கையாடத் தகுந்தவைகளே அவ்வாறு இல்லாமையினாலே கிராமங்கள் அசுத்தப்பட்டும் வியாதிகளால் பீடிக்கப்பட்டும் இருக்கின்றன.

கோலுமல்லா என்பவரும் எழுதிய புஸ்தகத்தில் எரு விஷயமாய் இன்னும் அதிகமாய் விவரித்திருக்கிறார். எருவிருக்க வேண்டிய இடமும், பள்ளம் இருக்கவேண்டிய முறைமையும், மட்கிய எரு தானிய பயிருக்கும் புதிய எரு புல்லுக்கும் போடலாமென்றும், எருவை உலரவிடாமலும் நனைத்தும் மட்கியும் வைக்கத் தெரிவித்தார்.

எருவின்மீபரில் மழைபெய்தால் உண்டாகும் கெடுதியைப் பற்றி இவ்விருவரும் தெரிவிக்கவில்லை. இவர்கள் சிறப்பு 18-ம் நூற்றாண்டு வரையில் ஐரோப்பாவில் செலாமணியாய் வந்தது. ராதாம் ஸ்டெட், கெம்பிரிஜ் பண்ணைகளில் 3-வருஷம் கவனித்து

Dr. Russell Richards என்பவர் Royal Agricultural Society பத்திரிகை 77-வாலிபம் 1915-வருஷத்தில் தெரிவித்த விஷயம் சங்கிரகமாய் பிரசுரிக்கப்படுகிறது.

எரு விஷயம் தற்காலம் மழைகால விவசாயிகளுக்கும் உஷ்ண சீத தேசத்தவர்களுக்கும் எல்லாப் பயிர்களுக்கு அவசியமானது. ஏனெனில் எல்லாவித எருக்களிலும் மாட்டெருவே பூலோகத்தில் விசேஷமாய் உபயோகப்பட்டு வருகிறது. மொத்த விலையிலும் எடையிலும் இதுவே முதன்மைப்பட்டிருக்கிறதாக தெரியவருகிறது. இங்கிலாந்து ஸ்காத்லாந்து ஐர்லாண்டில் மாத்திரம் சண்டைக்கு முந்தி ஒரு வருஷத்தில் 37,000,000 டன் உபயோகப்பட்டது. இதன் விலை 11,000,000 சவரன். மற்ற விதமான ரசாயன எருக்கள் 1,105,000 டன் உபயோகப்பட்டன. அதன் விலை 4,540,000 சவரன். இங்கிலாந்தில் மாட்டெரு டன் 1-க்கு 5 ரூபாய் ரசாயன எருவோ டன் ஒன்றுக்கு ரூபாய் 60. நமது தேசத்திய விலையை ஒத்துப்பார்க்க மாட்டெருவைக் கவனிக்காமல் கெடுத்து டன் 8-ரூபாய்க்கும் ரசாயன எருவைச் சுமார் 90—100 ரூபாய்க்கும் வாங்குகிறோம்.

ரசாயன ஞானத்துடன் இவ்வெருவை உண்டாக்குவது தேசத்துக்கு அவசியம். மற்ற தேசங்களிலோ மாட்டெரு மிக அதிகமாயும் ரசாயன எரு குறைவாகவும் உபயோகப்படுகிறது. இவ்வெரு எங்கும் விசேஷமாக உபயோகப்படுவதினால் அதைச் சேதாரத்துக்கு உட்படுத்தாமல் காப்பாற்றுவது தேச க்ஷேமம். ஆனால் இதைத் தக்கபடி பந்தோபஸ்து செய்யாமல் நஷ்டமடைவது எங்கும் சகஜம். இந்தியா தேசத்திலோ இவ்வாறு கெடுதி சொல்லிமுடியாது.

மாட்டெருவானது தின்ற தீனியில் ஜீர்ணமாகாமல் சாணம் ரூபமாயும் ரத்தத்தில் நீக்கப்பட்டதுமான மூத்திர ரூபமாயும் படுக்கையில் சேர்க்கும் சருகுசெத்தை முதலியவைகளும் சேர்ந்த வஸ்து. தற்கால சாஸ்திர ஆராய்ச்சியில் மூத்திரத்தில் இருக்கும் சிகணமும் சாம்பல் காரமும் செடிகளின் ஆகாரத்துக்கு மிக சிரேஷ்டமானதாகவும் அது சாணத்தைவிட சிரேஷ்டபட்டதென்றும் தெரிகிறது. ஏனெனில் மூத்திரம் ஜலரூபமாக இருந்து

உடனே உதவக்கூடிய தன்மையில் இருக்கிறது. பிண்ணாக்கும் தவிடும் கொள்ளும் தின்னும் எருது குதிரை இவைகளின் மூத்திரம் விசேஷசத்துள்ளது. இவைகளில் சிகணமும் பிராகாசமும் ஏராளம். இப்படியிருந்தும் மூத்திரம் தக்கபடி சேர்க்கப்படுவதில்லை. இதில் நஷ்டம் அதிகம்.

ராதாம் ஸ்டேட் பண்ணையில் நடந்தேறிய பரீக்ஷையில் எருவை மிதித்து அழுத்தி வைப்பதினால் சிகணம் கெடுவதில்லையென்றும், குவியலாய் வைக்கும் எருவில் உண்டாகும் நஷ்டத்தைவிட மிதித்துவைப்பதற்கு உண்டாகும் செலவு குறைவே யென்றும் காட்டியிருக்கிறது. தொழு எருவைச் சேகரித்து உபயோகத்துக்கு வேண்டியவரையில் மாடுகளால் மிதிக்கப்பட்டு நிழலில் வைத்திருப்பது சிரேஷ்டமான பழக்கமென்று காட்டியிருக்கிறது.

இரண்டாவது மாட்டெருவை வெயிலில் போட்டுவைப்பதா, நிழலில் வைப்பதா என்ற கேள்விக்கு நிழலில் இருப்பதே சிரேஷ்டமென்று பரீக்ஷையில் வெளிப்பட்டது.

நிழலினால் எரு சீக்கிரம் வரண்டு போகிறதென்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். அவ்வாறு வரண்டுபோனால் சிகணம் உப்பு வடிவமாகிறதென்றும் அதனால் நஷ்டமென்றும் தெரிவிக்கிறார்கள். நிழலில் இருக்கும் எருவில் ஜலம் மிதமின்றி சேர்ந்தால் ஷெ நஷ்டம் இன்னம் அதிகப்படுகிறது. ஆகையால் எருவை நிழலில் வைத்து உலராதபடி மாடுகளால் மிதிக்கவைப்பதே உத்தமமான பழக்கம்.

எவ்வளவு சாக்கிரதையா யிருந்தாலும் எருவின் குணம் குறைகிறதென்று அதைத் தடுக்க சாத்தியப்படாதா என்றும் கேள்வி. இவ்விஷயம் பரீக்ஷிக்கப்பட்டதில் சிகணம் பலவிதமாய் வெளிப்படுகிறதென்று தெரிகிறது. கரையும் தன்மையிலுள்ளதை மழை அடித்துப்போவதாகவும், நவசாரமாக காற்றால் வெளிப்படுவதாகவும் தெரிகிறது.

இந்த நஷ்டங்கள் காற்று எருவுக்குள் நுழைந்ததும் உண்டாகிறது. சூடேறுவதினால் அதிகம் நஷ்டமாகிறது. காற்று எருக்குள் செல்லாகிட்டால் இந்நஷ்டங்கள் உண்டாவதில்லை.

காற்றைப்பூராவும் நுழையவிடாமல் செய்தால் தானுப் உண்டாகும் உஷ்ணத்தினால் எரு பக்குவமாய் சமைந்து கெடுதி யில்லாமல் இருக்கிறது.

இவ்வாறு பரீக்ஷைகளில் தெரிந்தும் நஷ்டத்தைப் பூராவும் ஒழிக்க முடிவதில்லை. வித்தையின் விசேஷ மென்னவெனில் தெரிந்த விஷயங்களை சாத்தியமான வரையில் கையாண்டு நஷ்டத்தைத் தவிர்ப்பதேயாம்.

கிராமங்களில் நிழலில்லாமல் வெயிலில் குவியலாக சேர்க்கும் விதத்தில் நஷ்டம் விபரீதம். மழை விழாமல் நிழல் இருப்பதுடன் எருவை அமிழ்த்தி வைப்பது அவசியம். எருவிலிருந்து கசிந்துபோகும் ரசத்தை வாய்க்கால் வழியாய் வேறு தொட்டிகளில் சேர்த்து அதை எருவின்பேரில் கொட்டாமல் மூத்திரத்துடனும் சலத்துடனும் கலந்து உடனே செடிக்கு எருவாக்க வேண்டும்.

எருவை அடித்தரை புரைச்சலில்லாத தொட்டிகளில் சேர்த்து அமிழ்த்தியுட் உஷ்ணம் சுமாராக ஏறவிட்டும் வைப்பது சிரேஷ்டம். காற்றும் சலமும் எருக்குள் சேரலாகாது.

தொழு எருவைச் சேர்ப்பதில் 4 வண்டிக்குப் பதில் 20 வண்டி எரு நமக்குக் கிடைக்கிறது. எருவோ மிகச் சிரேஷ்டமானது. இப்பழக்கத்தை சர்க்கார் பண்ணைகளிலும் பெரியபாளையம் நமது சொந்த பண்ணையிலும் பார்க்கலாம்.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. C. R. Lakshmivaraha Ayyangar, B. A. B. L. and Mr. R. Srinivasa Ayyangar, B. A. for The Agricultural Association, No. 5. Cutchery Road Kumbakonam.